ராணி காமிக்ஸ்
ஜேம்ஸ்பாண்டு 007
அதிரடி தாக்குதல்!
கொலைக் கூட்டம்
வண்ணப் படக்கதை
ரூ. 5

துணிவே துணை !



கண்ட பேச்சு
பேசாதே!
கத்திக் கூச்சல்
போடாதே!
மண்டு வேலை
செய்யாதே!
மரத்தைப் போல
நிற்காதே!
பொல்லாப் போக்கில்
போகாதே!
போக்கிரி ஆட்டம்
ஆடாதே!
நல்ல நட்பைத்
தள்ளாதே!
நல்லோரை
பகை கொள்ளாதே!
பள்ளிக்கு விடுப்பு
போடாதே!
படிப்பில் ஓய்வும்
கூடாதே!
துன்பம் கண்டு
கலங்காதே!
துணிவே துணையாம்
துவளாதே!

—துரை. மூர்த்தி, ஆர்க்காடு.

ராணி காமிக்ஸ் – 484
(மாதம் இருமுறை இதழ்)
ஆகஸ்டு 16, 2004.

ஜேம்ஸ்பாண்டு 007

தடாலடி தாக்குதல்

கொலைக்கூட்டம்

குணா கரூர்

ஆஸ்திரியாவில் ஒரு பனி மலை. மலை ஏறும் குழு அதில் ஏறிக் கொண்டிருந்தது. திடீர் என்று—
அங்கே பார்!
ஒரு பிணம் கிடந்தது!
அச்சோ, பிணம்!
ஒரு போலீசு நிலையத்துக்கு விரைந்தார்கள்!
வேகமாப் போ!
சார்! பனி மலையில் பிணம்!
போலீசார் உடனே செயல் பட்டார்கள்!
பிணத்தை எடுத்து வாருங்கள்

ஹெலிகாப்டர் பனி மலைக்குப் பறந்தது!
தூக்குங்கள்!
பிரேத பரிசோதனைக்கு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது.
பல ஆண்டாகப் பனியில் கிடந்து பிணம் விறைத்துவிட்டது!
எப்படிச் செத்தார்?
தலையில் இரண்டு துப்பாக்கிக் குண்டுகள் இருந்தன!

பிணத்தின் உடையில் சில காகிதங்கள் இருந்தன!
இந்தக் காகிதங்கள் துப்புத்துலக்க உதவும்!
காகிதத்தில் இருந்த முகவரிக்கு போலீசார் போனார்கள்.
நீங்கள்தானே மிஸ் லில்லி?
ஆமாம்!
உங்கள் அப்பாவைப் பற்றி விசாரிக்க வந்திருக்கிறோம்.
என் அப்பா டேவிட், மலை ஏறுகிறவர்களுக்கு வழிகாட்டி. இருபது ஆண்டுக்கு முன் காணாமல் போய்விட்டார்.


இன்ஸ்பெக்டர் ஒரு மோதிரத்தைக் காட்டினார்.
இது அப்பாவின் திருமண மோதிரம். எப்போதும் கையில் அணிந் திருப்பார்.
அப்பாவின் படம் இருக்கிறதா?

படத்தைக் காட்டினாள்.
பனி மலையில் பிணமாகக் கிடந்தவர் இப்படித்தான் இருந்தார்.


ஆ! என் அப்பா பிணமாகக் கிடந்தாரா?


ஆமாம்! அவர் தலையில் இரண்டு துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந் திருந்தன!
உங்கள் அப்பா காணாமல்போன சூழ்நிலை உங்களுக்கு நினைவிருக் கிறதா?
அது போர் நேரம். ஒரு அதிகாரி என் அப்பாவை ஜீப்பில் அழைத்துப் போனார்!
போனவர் திரும்பவேயில்லை!
அப்பாவைக் கண்டுபிடிக்க அம்மா எவ்வளவோ முயற்சித்தார். முடியவில்லை. அந்த ஏக்கத்தில் அம்மா இறந்துபோனார்!


இந்தக் குண்டுகள் உன் அப்பாவின் தலையில் இருந்தவை. இங்கிலாந்தில் தயாரானவை.
அப்படியானால், இங்கிலாந்து இராணுவ அதிகாரிதான் என் அப்பாவைக் கொன்றிருக்க வேண்டும்!
மிஸ் லில்லி! கொலை நடந்து இருபது ஆண்டுக்கு மேலாகிவிட்டது. என்றாலும் குற்றவாளியைக் கண்டுபிடிக்க முயற்சிக்கிறோம்.
அவர் போனபின்...
இவர் என் அப்பாவின் நண்பரின் மகன். இவரது உதவியை நாடினால் என்ன?
லண்டனில்...
ஜேம்ஸ்! உங்களுக்கு ஆஸ்திரியாவிலிருந்து அழைப்பு. ஒரு பெண் பேசுகிறாள்.
ஜேம்ஸ்! நான் மிஸ் லில்லி பேசுகிறேன். உங்கள் தந்தையின் நண்பர் டேவிட்டின் ஒரே மகள்.

என்னது... உன் அப்பா கொலையா? குண்டுகள் இங்கிலாந்தில் தயாரானவையா?
ஜேம்ஸ் அழைக்க, மிஸ் லில்லி லண்டனுக்கு வந்தாள்.
நீங்கள்தான் எப்படியாவது கொலையாளியைக் கண்டுபிடிக்க வேண்டும்!
கொலையாளி இங்கே இங்கிலாந்தில்தான் இருக்க வேண்டும்.
அப்போது...
மன்னிக்க வேண்டும்! நீங்கள் மிஸ் லில்லிதானே?
நான் ஒரு பத்திரிகை நிருபர். உங்கள் தந்தையின் கொலையில் துப்புத் துலக்க நீங்கள் லண்டனுக்கு வருவதாக எங்கள் ஆஸ்திரியா அலுவலகத்தில் இருந்து தகவல் வந்தது!

அதற்குள் செய்தி இங்கே வந்துவிட்டதா?
ஆமாம். உங்களுடன் இருப்பவர் யார்?
இவர் எங்கள் குடும்ப நண்பர். வழிவிடுங்கள்.
மிஸ் லில்லி! உங்களுக்கு யார் மீதாவது சந்தேகம் இருக்கிறதா?
என் அப்பாவைக் கொன்ற குண்டுகள் இங்கிலாந்தில் தயாரானவை.
அந்தக் குண்டுகளை பரிசோதிக்க வேண்டும்!
இந்தக் குண்டுகள் இங்கிலாந்து இராணுவம் பயன்படுத்துபவை.


போர் நேரத்தில் இங்கிலாந்துப் படை ஆஸ்திரியாவுக்கு வந்தது!
இங்கிலாந்து இராணுவத்தின் எந்தப் பகுதி உங்கள் ஊர்ப் பக்கம் இருந்தது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்!
இராணுவ ஆவண அலுவலகத்துக்கு ஜேம்ஸ் போனார்.
இராணுவ அதிகாரிகள் கைத்துப்பாக்கியில் பயன்படுத்தும் குண்டுகள், இவை. ஆனால்...
மலை ஏறுவோருக்கு வழிகாட்டு கிறவரை இராணுவ அதிகாரி ஏன் சுட்டுக் கொல்ல வேண்டும்?
இருந்தாலும் ஆவணங்களைப் பார்ப்போம்!

அதேநேரம் ஜமைக்காவில் ஒரு சீனத் தொழிலதிபர் செய்தித்தாள் படித்துக்கொண்டிருந்தார்.
பனி மலையில் பிணம்! மர்மம் அம்பலம் ஆகுமா?
நாம் கவலைப்படவேண்டிய செய்தி, இது!
வீணாகக் கவலைப்படாதே! வேலையைப் பார்!!
நம்ம லண்டன் ஆட்கள் இதைப் பின்தொடர வேண்டும்!


ஆவணக் காப்பகத்தில்...
நேச நாட்டுப் படைகள் ஆஸ்திரியாவுக்குள் நுழைந்தது பற்றிய ஆவணம், இது.
அமெரிக்க கர்னல் ஒருவர் தலைமை தாங்கியிருக்கிறார்!
துணைத் தளபதியாக இருந்தவர் மேஜர் ஸ்டீபன். இங்கிலாந்துக்காரர்.

அன்று மாலை...
மிஸ் லில்லி! சில தகவல்கள் கிடைத்துள்ளன. ஆஸ்திரியாவில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த தங்கக்கட்டிகளை நேச நாட்டுப் படைகள் வேட்டையாடி யிருக்கின்றன!
அப்போது மேஜர்கள் மட்டுமே கைத்துப்பாக்கி வைத்திருந் தார்கள்!
இங்கிலாந்தை சேர்ந்த மேஜர் ஸ்டீபன் ஒரு கைத்துப்பாக்கி வைத்திருந்திருக்கிறார்!
தலைமை அலுவலகத்தில்—
ஆக, இந்தக் கொலையில் மேஜர் ஸ்டீபனுக்குத் தொடர்பு இருக்கும் என்று சந்தேகப்படுகிறீர்களா?
வெறும் சந்தேகம்தான்! அவர் இப்போது இருக்கிறாரா? எங்கே?
ஓய்வு பெற்றுவிட்டார்! ஜமைக்காவில் இருப்பதாகத் தகவல்!

மலை ஏறுகிறவர்களுக்கு வழிகாட்டுகிறவரை ஒரு மேஜர் ஏன் கொலை செய்ய வேண்டும்?
ஆனால், அந்நேரம் அவர் ஒருவரிடம்தான் கைத்துப்பாக்கி இருந்திருக்கிறது!
எதிரிப் படைகளைத் தேடிக் கண்டுபிடித்த போது பெட்டி பெட்டியாகத் தங்கம் கிடைத்தது என்று ஆவணங்கள் கூறுகின்றன!

அப்போது வங்கிகளில் இருந்த தங்கக்கட்டிகளைக்கூடக் கைப்பற்றினார்கள்!
எனவே, கொலைக்கு தங்கம் காரணமாக இருந்திருக்க வேண்டும்!
கொலை செய்யப்பட்ட டேவிட்டிடம் தங்கக்கட்டிகள் இருந்திருக்குமா?


நமது ஜமைக்கா அலுவலகத்துடன் தொடர்புகொண்டு, மேஜர் பற்றிக் கேட்கலாமே?
ஜமைக்கா அலுவலகம்.
சார், லண்டனிலிருந்து அழைப்பு!
மேஜர் ஸ்டீபன் பற்றி லண்டன் அலுவலகத்திலிருந்து கேட்கிறார்கள். அவரது கோப்பை எடு!


தலைமை அலுவலகம்
ஜமைக்காவிலிருந்து வந்த செய்தியைப் படித்தாயா, ஜேம்ஸ்?


மேஜர் இப்போது பெரிய தொழிலதிபர். கோடீசுவரர்.
இதில்தான் எனக்கு ஒரு சந்தேகம்.


ஒரு இராணுவ மேஜர் எப்படி திடீர் என்று கோடீசுவரர் ஆகமுடியும்?


மூலதனம் திரட்ட மேஜர் கொலை செய்திருப்பார் என்று நினைக்கிறாயா?
தங்கக்கட்டிகளுக்காக ஏன் கொலை செய்திருக்கக்கூடாது?


மேஜர் தங்கக்கட்டிகளைக் கைப்பற்றியதாக ஆவணம் இருக்கிறதா?
இல்லை! தங்கக்கட்டிகளை மேஜர் அமுக்கிக்கொண்டிருக்கலாம்!
தான் மறைத்து வைத்ததைப் பார்த்துவிட்ட டேவிட்டை சுட்டுக் கொன்றிருக்கலாம்!
நல்ல கற்பனைதான், ஜேம்ஸ்!
கற்பனைகள் பல நேரம் உண்மையாவது உண்டு!
ஒருமுறை ஜமைக்காவுக்குப் போனால் உண்மை தெரிந்துவிடும்!
போய் வா! மேஜருக்கு உன்னைத் தெரிந்திருக்கலாம். அதனால் நீ வேறு பெயரில் சாதாரண ஆளாகப் போவது நல்லது!

மிஸ் லில்லியுடன் ஜேம்ஸ் ஜமைக்காவுக்குப் புறப்பட்டார்.
உங்கள் பெயர் மில்டன்தானே?
ஆமாம்! உன் பாய்பிரண்டு!
அலோ மிஸ் லில்லி!
யார் குரலுக்கும் செவிசாய்க்காதே!
அன்று என்னை பேட்டி கண்ட அதே பத்திரிகை நிருபர்தானே?
அதே ஆள்தான்!
அந்த ஆள் ஏன் என்னையே சுற்றி வருகிறார்?
விமானம் கிளம்பியது. அதேநேரம்—
மிஸ் லில்லி ஜமைக்கா வருகிறாள். அவளுடன் மில்டன் என்ற பாய்பிரண்டும் வருகிறார்!

பயணிகள் பட்டியலில் நமது பெயர்களைப் பார்த்திருப்பாரோ?
பார்த்திருந்தால், நாம் வரும் செய்தி நமக்கு முன்னே ஜமைக்காவுக்குப் பறந்திருக்கும்!
விமானம் ஜமைக்காவில் போய் இறங்கியது!
நாம் இறங்க வேண்டியதுதான்!
இருவரும் இறங்கி வெளியே வந்தார்கள்.
மிஸ் லில்லி! நான் ஒரு பத்திரிகை நிருபர்!
நீங்கள் எதுக்காக இங்கே வந்திருக்கிறீர்கள்?
உன் விருப்பம் போலக் கதைவிடு!
ஜேம்ஸ்! எனக்குப் பயமாக இருக்கிறது!
செய்தியைப் படிப்பவர்கள் தான் பயப்பட வேண்டும்!
பத்திரிகை படித்தாயா? அவர்கள் ஜமைக்கா வந்துவிட்டார்கள்!


ஜேம்சும், லில்லியும் ஒரு ஓட்டலில் தங்கினார்கள்.
ஏஞ்சலா! நான் மில்டன் பேசுகிறேன்!
நான் கேட்ட தகவல்கள் தயாரா?
அதற்கு மேலேயே தயாராக இருக்கிறது!
ஓட்டல் சாப்பாட்டு அறையில் மூவரும் சந்தித்தார்கள்.
மிஸ் லில்லி! இவள் மிஸ் ஏஞ்சலா! இங்கே எங்கள் அலுவலகத்தில் வேலை செய்கிறாள்!
மேஜரின் மாளிகையைப் பார்க்கப் போகலாமா?
கிளம்புவோம்!
என் கார் சின்னக் கார். இரண்டு பேர்தான் பயணம் செய்ய முடியும்!

நீங்கள் இருவரும் போய் வாருங்கள். நான் அறையில் இருக்கிறேன்!
ஜேம்ஸ், ஏஞ்சலா இருவரும் கிளம்பினார்கள்.
மேஜரின் கம்பெனியையும் பார்க்க வேண்டும், ஏஞ்சலா!
இருவரும் காரில் கிளம்பினார்கள்.
அதோ அதுதான் மேஜரின் ஓரியண்டு டிரேடிங் கம்பெனி. லண்டன், ஆங்காங், சிங்கப்பூரில் கிளைகள் இருக்கின்றன!
இது முழுக்க மேஜருக்குச் சொந்தமான கம்பெனியா?
இல்லை! இரண்டு கூட்டாளிகள் இருக்கிறார்கள்!
இருவரும் சீனர்கள். சகோதரர்கள். அண்ணன், கிங்போ. தம்பி, யங்போ.


இதுதான் மேஜரின் கடற்கரை மாளிகை!
ஒரு மேஜருக்கு, ஒரு கடற்கரையில் இவ்வளவு பெரிய மாளிகை இருக்கமுடியாது!
அப்போது மேஜர் மாளிகையில் இருந்தார்.
பிறகு பேசுகிறேன் என்று சொல்.
மிகவும் அவசரம் என்கிறார், கிங்போ!
மேஜர் மாளிகையில் இருப்பது போலத் தெரிகிறது. சந்திக்கிறீர்களா?
வேண்டாம்! இன்னும் சில முன்னேற்பாடுகள் செய்ய வேண்டும்!


மாளிகை உள்ளே...
மேஜர் பேசுறேன்! ஏன்ன தலைபோகிற அவசரம்?
கொலை செய்யப்பட்ட டேவிட்டின் மகள் லில்லி ஜமைக்காவுக்கு வந்திருக்கிறாள்!
வரட்டுமே! நாம் ஏன் கண்டுகொள்ள வேண்டும்?
ஒரு துப்பறியும் நிபுணரையும் உடன் அழைத்து வந்திருக்கிறாள்!
கொலை நடந்து 20 ஆண்டு ஆகிவிட்டது. இப்போது எந்தத் துப்பும் கிடைக்காது. கவலைப்பட வேண்டாம், கிங்போ!

ஜேம்ஸ் ஓட்டலுக்குத் திரும்பினார்.
ஜேம்ஸ்! நமது அறைக்குள் யாரோ புகுந்து சோதனை போட்டிருக்கிறார்கள்!
இங்கு நாம் வந்திருப்பது கொலைகாரர்களுக்குத் தெரிந்துவிட்டது போலும்
இன்று இரவு மேஜரின் கம்பெனியை நான் சோதனை போடப்போகிறேன்!
இரவு ஏஞ்சலா வந்தாள்.
சார், நீங்கள் கேட்டவை தயார்! இதிலே மயக்க வாயு இருக்கிறது!
ஏஞ்சலா! நான் ஒரு ஆள் கேட்டேனே?
அழைத்து வந்திருக்கிறேன். அவர் பெயர் டேனி!


இரவு 9.55க்கு இந்தப் பெட்டியைக் காவலாளி கையில் கொடுக்க வேண்டும்!
கச்சிதமாகக் கொடுத்துவிடுகிறேன்!
ஒய்வு எடுத்துக்கொள். மிஸ் லில்லியை அழைத்துப்போகிறேன்!
ஜேம்ஸ் சார்! இரவு நான் வரவேண்டுமா?
இரவு 9.55. டேனி வந்தான்
உனக்கு என்ன வேண்டும்?


மேஜர் அனுப்பினார். இந்த டப்பாவை யங்போவிடம் கொடுக்கச் சொன்னார்.
சற்று மறைவாக ஜேம்ஸ்பாண்டு, லில்லி இருந்தார்கள்.
மயக்க வாயுப் பெட்டியை டேனி, காவலாளியிடம் கொடுத்துவிட்டார்!

இரவுக் காவலாளி ஏதோ படித்துக்கொண்டிருந்தார். அப்போது மயக்க வாயு கசிந்தது!
என்ன மணக்கிறது?
இந்நேரம் காவலாளி மயங்கியிருப்பார். நான் போகிறேன். நீ இங்கேயே காவலுக்கு இரு!
ஜேம்ஸ் வந்து பார்த்தார்.
காவலாளி மயங்கிவிட்டார்!
மயக்க வாயு என்னைத் தாக்கிவிடக்கூடாதே!

ஜேம்ஸ் மதுவை ஊற்றினார்.
யாராவது வந்தால், காவலாளி குடித்து மயங்கிக் கிடப்பதாக நினைக்கட்டும்!
இப்போது பயமில்லாமல் உள்ளே போகலாம்!
ஜேம்ஸ் கள்ளச் சாவி போட்டு அலுவலக அறையைத் திறந்தார்!
இதுதான் மேஜரின் அறையாக இருக்கக்கூடும்!
இதுதான் மேஜரின் மேஜை போலிருக்கிறது!
மேஜையை சோதித்தார்!
என்ன ஆச்சரியம்! மேஜை காலியாக இருக்கிறதே! சும்மா பெயருக்குத்தான் அலுவலகமா?

கம்பெனியின் பெயரில் வேறு ஏதோ நடக்கிறது என்று நினைக்கிறேன்!
CARIB ORIENT
பஸ்... ஸ்...
மிஸ் லில்லி அழைக்கிறாள்!
என்ன லில்லி?
கம்பெனி முன் ஒரு கார் வந்து நிற்கிறது!
எங்கே காவலாளியைக் காணோம்?
தூக்கம் வந்திருக்கும்!
உள்ளே வந்து பார்த்தார்கள்!
நான் சொல்லவில்லை? நல்ல தூக்கம்தான்!

இல்லை! மூக்கு முட்டக் குடித்துவிட்டு மயங்கிக்கிடக்கிறான்!
அவனை விடுங்க! காலையில் டிஸ்மிஸ் செய்துவிடுவோம்!
நாம் வந்த வேலையைப் பார்ப்போம்!
இங்கே இருந்து ஜன்னல் வழியே பார்த்தால் தெரிகிறது!
ஜேம்ஸ்! அவர்கள் காரில் பின்பக்கமுள்ள கட்டிடத்துக்குப் போகிறார்கள்!

காரிலிருந்து ஒரு சவப்பெட்டியை இறக்கினார்கள்!
மெதுவா!
சவப்பெட்டி எங்கே இங்கே?
ஜேம்ஸ்பாண்டு அதைக் கவனித்தபடி இருந்தார்.
பிறகு கார் திரும்பிச் சென்றது.
காவலாளி இன்னும் எழவில்லை!
ஜேம்ஸ் உடனே உள்ளூர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டார்.

மேஜரின் ஒரியண்டு கம்பெனி சவப்பெட்டிகளை ஏற்றுமதி செய்கிறதா?
உம்... இங்கே யாராவது சீனர் இறந்திருப்பார். அவரது உடலை சீனாவுக்கு அனுப்புகிறார்கள் போலிருக்கிறது!
அவர்களுக்குச் சொந்தக் கப்பல் இருக்கிறது!

தகவலுக்கு நன்றி!
ஜேம்ஸ்! ஆபத்து ஏதுமில்லையே?
இல்லை, லில்லி! நீ அங்கேயே இரு. நான் கிட்டங்கியைப் பார்த்துவிட்டு வருகிறேன்!
ஜேம்ஸ் கிட்டங்கிக்குக் கிளம்பினார்.
நல்ல வேளை, காவலாளிக்கு இன்னும் மயக்கம் தீரவில்லை!
ஜேம்ஸ் கிட்டங்கிக்கு வந்தார்.
எல்லாம் கப்பலுக்குப் போகவேண்டிய சரக்குகள்.
அதோ சவப்பெட்டி!
சவப்பெட்டியைத் திறந்தார்!
இறந்தவர் என்னை மன்னிக்கவேண்டும்.

ஆ! என்ன இது!
அதே நேரம்...
அந்த மில்டனால் நம்மை எதுவும் செய்ய முடியாது!
மில்டன் பெரிய எம்டனாம்! நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்!!
சவப்பெட்டி பாதுகாப்பாக ஆங்காங் போய்ச் சேர்ந்துவிடும்!
எனக்குப் பயமா இருக்கிறது. எதற்கும் காவலாளியிடம் கேட்போம்!

போன் செய்தார்!
மணி அடிக்கிறது. எடுக்க ஆள் இல்லையே!
காரை எடு! நாம் நேரில் போய்ப் பார்த்துவிடலாம்!
அதே நேரம்...
தகர முலாம் பூசப்பட்ட தங்கத் தகடு! பிணம் அனுப்புவதாகக் கூறி, தங்கம் கடத்துகிறார்களா?
ஜேம்ஸ் திரும்பி வந்தார்.
காரை எடு, வில்லி!


ஏதாவது துப்புக் கிடைத்ததா, ஜேம்ஸ்!


மேஜர், அவருடைய கூட்டாளிகள் எல்லோரையும் கூண்டோடு பிடிக்கும் அளவுக்குத் துப்புக் கிடைத்திருக்கிறது!

உடனே போலிசுக்குப் போகலாமா?
சவப்பெட்டியில் சீனரின் உடல் எதுவும் இல்லை. ஒரு வெள்ளைக்காரர் பிணம் இருந்தது. அவரது நெற்றியை துப்பாக்கிக் குண்டு துளைத்திருந்தது! இப்போதே போலீசுக்குத் தகவல் கொடுக்கவேண்டும்.
ஜேம்ஸ் தகவல் சொல்ல, உடனே போலீஸ் புறப்பட்டது!
ஓடி வாங்க... மிக அவசரம்!
ஓரியண்டு கம்பெனிக்கு போலீஸ் வந்தது.
கம்பெனியை சோதனை போட வேண்டும்!
தாராளமாக!

நீ எவ்வளவு நேரமா இங்கே இருக்கிறாய்?
இரவு முதல் ஷிப்ட் வாட்ச்மேன் வீட்டுக்குப் போனதும் நான் வந்தேன்!
இதுதான் கிட்டங்கியா? திற!
சவப்பெட்டி எங்கே?
அதோ இருக்கிறது!
அதைத் திற!
ஒரு சீனரின் பிணம்!
இன்று மாலைதான் இறந்தார். சீனாவில் அடக்கம் செய்ய ஆங்காங் போகிறது!

போலீசார் ஏமாற்றத்துடன் திரும்பினார்கள்.
என்ன நடந்திருக்கும் என்றால்...
மிஸ்டர் மில்டன் எங்களை இக்கட்டான நிலையில் மாட்டி விட்டு விட்டீர்கள்!
நான் கிட்டங்கிக்கு வந்தது எப்படியோ தெரிந்து, பிணத்தை மாற்றியிருப்பார்கள்!
தங்கத் தகடையும் மாற்றிவிட்டார்களா?
சவப்பெட்டியையே மாற்றியிருப்பார்கள்!

ஐம்பது வயது மதிக்கத்தக்க வெள்ளைக்காரர் யாரும் காணாமல் போனதாகவும் புகார் இல்லையே! நீங்கள் போகலாம்!
அப்போது ஒரு போன் வந்தது.
மிஸ்டர் மில்டன்! கொஞ்சம் நில்லுங்கள்!
ஒரு வெள்ளைக்காரரைக் காணவில்லை என்று இப்போதுதான் போன் வந்தது!
53 வயதான அவரை இரண்டு நாளாகக் காணவில்லையாம்!
அவரைப் பற்றி வேறு ஏதாவது விவரம் உண்டா?


அவரது பெயர், அந்தோணி. சுங்கவரி அதிகாரி.


ஜேம்ஸ்பாண்டு அறைக்குத் திரும்பினார்.
இன்னொரு கொலையா?
ஆமாம், லில்லி. மேஜரும், அவருடைய கூட்டாளிகளும் சவப்பெட்டி என்று தங்கம் கடத்துகிறார்கள்.


இருவரும் வெளியே கிளம்பினார்கள்.
நாம் இப்போது எங்கே போகிறோம்?
மேஜரின் மாளிகைக்குப் போகவேண்டிய நேரம் வந்துவிட்டது!
தங்கக் கடத்தலை சுங்க இலாகா அதிகாரி கண்டுபிடித்திருப்பார். ஆகவே, அவரைக் கொன்றிருப்பார்கள்.
இவர்கள் போனபோது, மாளிகை அருகே கடலில் ஒரு விமானம் இறங்கியது!
தங்கக் கட்டிகளை மேஜர் இங்கேதான் மறைத்து வைத்திருக்கக் கூடும்!
நமக்கு இங்கே இன்னொரு வேலையும் இருக்கிறது!


மாளிகை வாசலில்,
அவர் வரும்வரை நாங்கள் காத்திருக்கிறோம்!
மேஜர் வெளியே போயிருக்கிறார்
அதோ, விமானம் இறங்கிவிட்டது! மேஜர் வந்துவிட்டார்!!
மேஜர் கடலில் நீந்தி வந்தார்.
மேஜர்! நீங்கள் படகில் வருவீர்கள் என்று நினைத்தேன்.
நீந்துவது எனக்குப் பிடிக்கும். அதுதான் மாளிகைவரை கடல் நீரைக் கொண்டு வந்துவிட்டேன். ஆமாம், நீங்கள் யார்?


நான் மில்டன்.
இங்கிலாந்து இராணுவத்தில்
பணியாற்றுகிறேன்!
ஓ! எனது
பழைய பணி!
இவள் மிஸ் லில்லி. ஆஸ்திரியாவில்
மலையேறுவோருக்கு வழி
காட்டியாக இருந்த டேவிட்டின்
ஒரே மகள்.
மிஸ்டர் மில்டன்!
நான் உடை மாற்றி
வருகிறேன்!
நாங்கள்
காத்திருக்கிறோம்


காத்திருந்த நேரத்தில், ஒரு போனுக்கு அடியில் ஒட்டுக் கேட்கும் கருவியை ஜேம்ஸ்பாண்டு பொருத்தினார்.
இதற்குத்தான் இங்கே வந்தது!
உடைமாற்றிக்கொண்டு மேஜர் வந்தார்.
இருவரும் இங்கே எதற்காக வந்திருக் கிறீர்கள்?
இருபது ஆண்டுக்கு முன் டேவிட் கொலை செய்யப்பட்டார்!
அதற்கு இப்போது ஏன் இங்கே வந்திருக்கிறீர்கள்?
ஒரு மேஜரின் கைத் துப்பாக்கிக் குண்டுகள்தான் அவரைக் கொன்றன!


நீங்கள் அப்போது மேஜராக இருந்தீர்கள். உங்கள் கைத்துப்பாக்கி உங்களிடம் இருக்கிறதா?
இல்லை!
மிஸ்டர்! அந்தக் கொலைக்கும் எனக்கும் முடிபோடப் பார்க்கிறாயா?
இல்லை! இருந்தாலும் உங்களிடம் கேட்போமே என்றுதான்...
ஆஸ்திரியாவில் அப்போது இங்கிலாந்துப் படைகள் ஏராளமான தங்கக் கட்டிகளைக் கைப்பற்றியது. சிலர் தங்கக் கட்டிகளைத் தாங்களே வைத்துக்கொண்டார்கள்!
இப்போது உங்கள் கம்பெனி ஆங்காங்குக்குத் தங்கம் கடத்துவதாக எனக்குத் தகவல் கிடைத்தது!


இதுபோல சந்தேகப்பட்ட ஒரு சுங்க அதிகாரியைக் கொன்று விட்டார்கள்!
சுங்க அதிகாரி கொலையா? எப்போது?
இருவரும் வெளியே வந்தார்கள்.
லில்லி! மேஜரை அசைத்துவிட்டோம்!
ஏன் காரை நிறுத்தி விட்டீர்கள்?
ஒட்டுக்கேட்கும் கருவியைக் கவனிப்போம்!
மேஜர் பேசுகிறேன்! யங்போவை உடனே பேசச் சொல்லுங்கள்!
நான் யங்போ பேசுகிறேன், மேஜர். என்ன விசயம்?

சுங்க இலாகா அதிகாரியைக் கொன்று விட்டீர்களா?
அது எப்படி உங்களுக்குத் தெரிந்தது? அவரது உடலைக்கூட சுறாக்களுக்குப் போட்டு விட்டோமே!
அந்த மில்டன் இங்கே வந்தார். டேவிட் கொலை, தங்கக்கட்டி கடத்தல் பற்றிப் பேசிவிட்டு, இந்தக் கொலையையும் சொன்னார்.
இதெல்லாம் போனில் பேசக்கூடாது! நேரில் வாருங்கள்!
லில்லி! அதோ மேஜர் வேகமாகக் காரில் போகிறார்!!


லில்லி! நீ இங்கேயே இரு. நான் போய் அவரது மாளிகையை சோதனை போடுகிறேன்!
அலுவலகத்துக்கு மேஜர் வந்தார்.
மிஸ்டர் யங்! சுங்க அதிகாரியை ஏன் கொன்றீர்கள்?
மெதுவாப் பேசுங்க! சுவர்களுக்குக்கூடக் காது உண்டு!!
அப்போது ஜேம்ஸ்பாண்டு கடலில் நீந்தி வந்தார்!
முதலாளி வீட்டில் இல்லை என்றதும் காவலாளி யாரும் இல்லை!

மேஜர் அலுவலகத்தில்,
சவப்பெட்டி வழியே நாம் தங்கம் கடத்துவதை சுங்க அதிகாரி கண்டுபிடித்துவிட்டார்!
ஒரு பெண் வழியே பத்தாயிரம் டாலர் கொடுத்து அனுப்பினோம். வாங்க மறுத்து விட்டார்!
அதனால் ஒரு நேர்மையான அதிகாரியைக் கொன்றுவிட்டீர்களா? இது எப்படி மில்டனுக்குத் தெரிந்தது?
அந்த ஆள் நமது காவலாளிக்கு மயக்க வாயு கொடுத்து மயங்க வைத்துவிட்டு, நமது கம்பெனிக்குள் நுழைந்துவிட்டார்!
கிட்டங்கிக்குள்ளும் நுழைந்து, சவப்பெட்டியைப் பார்த்துவிட்டார்!

இந்தக் கொலைப் பழியும் என்மீது!
சாந்தமாகப் பேசுங்கள், மேஜர்!
மேஜர் அல்லவா? இப்படித்தான் அடிக்கடி மீசை துடிக்கும்!
உங்கள் கூட்டே எனக்கு வேண்டாம்! நான் விலகிக் கொள்ளுகிறேன்!
ஏய் சாங்! மேஜரைப் பின்தொடர்!
அதே நேரம் மேஜர் வீட்டில் ஜேம்ஸ் சோதனைபோட்டார்.
தங்கக் கட்டிகள் சுவருக்குள் இருக்குமோ!


மேஜர் வங்கிக்கு வந்தார்.
என் பணத்தை சுவிட்சர்லாந்து வங்கிக்கு மாற்றுங்கள்!
சார்! மேஜர் வங்கிக்கு வந்தார். பணத்தை சுவிட்சர்லாந்துக்கு மாற்றுகிறார்!
ஐயோ! மேஜர் பணத்துடன் ஓட முயற்சிக்கிறார்! தடுத்து நிறுத்தவேண்டும்!
மேஜர் வீட்டில்...
தங்கக்கட்டிகளை ஏற்கனவே கடத்திவிட்டாரா? 20 ஆண்டு ஆகிவிட்டதே!
அதே நேரம் மேஜர் வீட்டுக்குத் திரும்பினார்.
உள்ளே வா!

லில்லி வெளியில் காரில் மறைந்திருந்தாள்.
என் விமானம் உடனே தயாராகட்டும்!
மேஜர் எங்கோ பறக்கப் போகிறார்!
இன்னொரு கார் வருகிறதே!
கடலில் நீந்திப்போய், விமானத்தில் ஏறப்போகிறாரா?
அப்போது...
டிரிங்.


கதவு திறந்ததும் போ சகோதரர்கள் நின்றார்கள்.
உடனே மேஜரைப் பார்க்க வேண்டும்.
கிங்போ, யங்போ இருவரும் வந்திருக்கிறார்கள்.
நான் யாரையும் பார்க்க விரும்பவில்லை.
மேஜர் வெளியே வந்தார்.
மேஜர்! எங்கே கிளம்பிவிட்டீர்கள்?
அது உங்களுக்குத் தெரியவேண்டியதில்லை! உங்கள் தொடர்பே இனி வேண்டாம்!!
இதைக் கொண்டுபோய் விமானத்தில் வை!
கொஞ்சம் பொறுங்கள், மேஜர்!

இப்போது நீங்கள் வெளியேறினால், சுங்க அதிகாரியைக் கொன்றது நீங்கள்தான் என்றாகிவிடும்!
சுங்க அதிகாரியைக் கொன்றது நீங்கள் இருவரும்தான்!
ஆஸ்திரியாவில் டேவிட்டைக் கொன்றது நீங்கள்தானே?
டேவிட்டைக் கொன்றுவிட்டு, தங்கக்கட்டிகளை எடுத்துக் கொண்டீர்களே!
அவர்கள் பேசியது லில்லிக்குக் கேட்டது.
தங்கக்கட்டிகளை இங்கே கடத்திவர நீங்கள்தான் உதவி செய்தீர்கள்!

சுங்க அதிகாரி
கொலை உங்கள்
தலையில்தான்
விழும்!
நீங்கள் இருவருந்தான்
சுங்க அதிகாரியைக்
கொலை செய்தீர்கள்
என்று நானே
போலீசில்
சொல்லுவேன்!
அப்போது ஜேம்ஸ்பாண்டு திரையை
விலக்கிக்கொண்டு
கூடத்துக்கு
வந்தார்.
இப்போது எல்லோரும்
மாட்டிக்கொண்டீர்கள்!
யங் துப்பாக்கியை
எடுத்தான்!
அப்படியே நில்!

என்னைக் கொன்றுவிடலாம். ஆனால், இந்த ஒட்டுக் கேட்கும் கருவி வழியே டேவிட்டின் மகள் லில்லி எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருக்கிறாள்!
ஜேம்ஸ் பேசிக்கொண்டே மேஜை மேலிருந்த பொம்மையை எடுத்தார்!
உன் துப்பாக்கிக்கு இதுதான் என் பதில்!
ஜேம்ஸ் வீசிய பொம்மை யங்கை பதம் பார்த்தது.


கீழே விழுந்த துப்பாக்கியை எடுக்க, மேஜர் முயற்சித்தார்!
ஜேம்ஸ் மின்னல் வேகத்தில் செயல்பட்டார்!
படார்!
இன்னும் ஒண்ணு!
கீழே விழுந்த துப்பாக்கியை ஜேம்ஸ் எடுத்துக்கொண்டார். அதே நேரம் கிங் சுட்டான்!
டுமீல்...

ஜேம்ஸ் பூப்பறிக்க போவாரா, என்ன?
டுமீல்...
அப்போது லில்லி வேகமாக ஓடிவந்தாள்.
ஜேம்ஸ்...
சிறிய காயம்தான். பயப்படுவதற்கு இல்லை!
போலீசுக்கு போன் செய்து வரச் சொல்!


போ சகோதரர்கள் செய்த துரோ கத்தால் மேஜர் மனம் மாறினார்.
மிஸ் லில்லி! உன் தந்தை எப்படி இறந்தார் என்பது எனக்கு மட்டும்தான் தெரியும்!
ஆஸ்திரியாப்படைகள் சரணடைந்தபோது, எனக்கு ஒரு தகவல் கிடைத்தது!
பனி மலையில் தங்கக்கட்டிகள் புதைத்து வைக்கப்பட்டிருந்த தகவல்தான், அது.
மலை வழிகாட்டியான உன் தந்தையை அழைத்துக்கொண்டு பனி மலைக்குப் போனேன்!

தங்கக் கட்டிகளைப் பார்த்தேன்!


ஆ! அத்தனையும் தங்கம்!!

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு வெளியிட்டவர்: சி. கல்யாண சுந்தரம்
ராணி பிரஸ், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. ஆசிரியர்: அ.மா. சாம
86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.

அடுத்த காமிக்ஸ்

மாயாவி
மரண அடி

முடிசூட்டு விழா

வண்ணப் படக்கதை

செப்டம்பர் 1-ந்தேதி கடையில் கிடைக்கும்!

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.

Regd. with the Registrar of Newspaper
for India under No. 42576/84 – ISSN 0971–8567

August 16, 2004.

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

தினத் தந்தி

வழங்கும்

வெள்ளி தோறும்

சிறுவர் தங்கமலர்



★ அட்டையில் உங்கள் குழந்தையின்படம்
★ புராண படக்கதை
★ துப்பறியும் படக்கதை
★ குழந்தைகளுக்கு அறிவியல் தகவல்கள்
★ மாயாஜால சிறுவர் தொடர்கதை
★ சிறுகதைகள்
★ பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்

தினத்தந்தியுடன்

வெள்ளி தோறும் வண்ண புத்தகம் இலவசம்

உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்